1969 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் இங்கே பத்திரிகையைப் படிக்கவில்லை. பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது என்று கூறுகிறார். பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது என்று கூறுவதற்கு முழு உரிமையுண்டு.

7. திரு. பாலன் அவர்களுடைய பேச்சில் கூறப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க குழு அமைத்தல்.

***திரு. டி. மார்டின் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். உறுப்பினர்கள் இங்கே பேசுகின்றபோது வெளியிலே உள்ள பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துக் கொண்டு குற்றச்சாட்டாக இருந்தாலும் சரி, வேறு வகையில் இருந்தாலும் சரி பேசுவதற்கு உரிமை இருக்கிறதா என்பது முதல் கேள்வி.

இரண்டாவது, இதே மாமன்றத்தில் சில நாட்களுக்கு முன்பு மண்ணெண்ணெய் டிஸ்ட்ரிப்யூஷன் விஷயமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது "ஆதாரம் நாளைக்குக் கொண்டு வந்து தருகிறேன்" என்று சொன்னதற்கு "அப்ஜக்ஷன்" எழுப்பப்பட்டது. உடனே கொடுங்கள் என்று சொன்னார்கள். அங்கத்தினர்கள் திடீரென்று எதையும் கொண்டுவர முடியாது. இந்த விதமான குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறபோது, பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துப் பேசுகிறபோது, ஆதாரம் இருக்கிற காரணத்தால், அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று தலைவர் அவர்கள் தீர்ப்பளிக்கும்போது இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சொல்லுகின்ற குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு எந்த விதமான ஒழுங்கு முறை சட்ட மன்ற விதிகளில் இருக்கின்றது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

இப்போது பேசிய உறுப்பினர் அவர்கள் "பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்" என்று சொல்லுகிறார்கள். முன்பு இருந்த முதலமைச்சர் அவர்கள் காலம் சென்ற சட்ட மன்ற உறுப்பினர் திரு. சங்கர ரெட்டியார். அவர்களுக்காகவே இதை விட்டு விட்டார்கள் என்ற குறையைச் சொன்னார்கள். இதை ஒரு கமிட்டி வைத்து விசாரித்தால் நல்லது. அதற்காக ஒரு குழுவை அமைக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்காக ஒரு குழுவை அமைப்பது பற்றிய தீர்ப்பைத் தலைவர் அவர்கள் நாளைக்குக் கூறுவார்கள். தற்போது நேரம் குறைவாக இருப்பதோடு பல உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால் விவாதத்தைத் தொடர்ந்து நடத்த உறுப்பினர்கள் உதவியாக இருக்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : குழு அமைக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குழு அமைப்பதைப் பற்றித் தலைவர் அவர்கள் நாளைக்கு அறிவிப்பார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இப்போது நீங்கள் தான் சபாநாயகர். உங்களுடைய ரூலிங் என்ன ? தாங்கள் குழுவை அமைக்கப் போகிறீர்களா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குழுவை அமைக்கிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : திரு. இராமமூர்த்தி அவர்கள் மண்ணெண்ணெய் விஷயமாகச் சாட்டிய குற்றச்சாட்டில் அன்றே நிரூபிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதற்கு திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு நாள் தவணை வேண்டுமென்று கேட்டார்கள். அடுத்த நாளாவது நிரூபிக்க முடியுமா என்று கேட்டதற்கு முடியாத நிலைமையிலே சும்மா உட்கார்ந்து விட்டார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : முடியாத நிலை என்பது தவறான ஒன்றாகும். விளக்கத்தைக் கேட்காமலே முடிவு எடுத்தார்கள். அமைச்சர் அவர்கள் தவறான விளக்கத்தைத் தற்போது தருகிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மண்ணெண்ணெய் விஷயமாக அடுத்த நாளே ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் தப்பித்துக் கொள்ள முடியாது. நாங்கள் சொன்னது, வெளியில் அதிக விலை விற்கப்படுகிறது என்பதாகும். அடுத்த நாளே நடவடிக்கை எடுத்து சிலரைக் கைது செய்திருப்பதால் அங்கத்தினர் சொன்னது முழுக்க முழுக்க உண்மை என்பதை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசிய நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவையில் இல்லை. அப்போதே நான குறுக்கிட்டுச் சொல்லியிருக்கிறேன். "மண்ணெண்ணெயைப் பதுக்குகிறவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. யார் கூடுதலான விலைக்கு விற்றாலும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படுகிறது" என்று நான் சொன்னேன். அவர் சொன்னதற்கு முன்னாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. சொன்ன பிறகும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்குகிறது என்பது தான் அவருடைய குற்றச்சாட்டு. அந்த நிலை இல்லை என்று விளக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்று இல்லை. இல்லாத நேரத்தில் பேசியதாகக் கருதிக் கொண்டு விளக்க முன் வந்தது விந்தையாக இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் சர்க்காரைப் பாராட்டுகிறேன். நாங்கள் சொன்ன அடுத்த நாளே கைது செய்தார்கள்.

6. 1969-70-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. எம். சி. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, பலரும் குறுக்கிட்ட காரணத்தால் 10 நிமிடத்தில் 2 நிமிடந்தான் பேசியிருக்கிறேன். மீதி 8 நிமிடத்தையும் எனக்குத் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டங்கள் சிறிய அளவில் அமைக்கப்பட்டால்தான் நிர்வாகம் நல்ல முறையில் இயங்கும் என்று அமைச்சர் அவர்கள் புரட்சிகரமான திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். குமரி மாவட்டம் மிகச் சிறிய மாவட்டமாக இருக்கிறது. நெல்லை மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிறது. நாங்குநேரி வறண்ட பகுதி, குமரி மாவட்டப் பகுதிகள் செழிப்பான பகுதி. குமரி மாவட்டத்தில் மக்கள் தொகை அதிகம், நாங்குநேரியில் மக்கள் தொகை குறைவு. ஆகவே, அதை எங்கள் மாவட்டத்துடன் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது என்னுடைய கருத்து என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் இது அந்த மாவட்டத்தில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில், பி. ஏ., பி. எல்., எம். ஏ. படித்தவர்கள் எல்லாம் கூட கடந்த 12 ஆண்டு காலமாக தாசில்தார்களாகவே இருக்கிறார்களே தவிர, சப்-கலெக்டர் புரோமோஷன் யாருக்கும் தரப்படவில்லை. மற்ற மாவட்டங்களில் பலர் புரோமோஷன் பெறும் நிலையில் இங்கு அந்த நிலை இல்லை. தாய்த் தமிழகத்துடன் சேர வந்தவர்கள் என்ற நிலையிலே எங்களைக் காங்கிரஸ் கட்சி காலத்திலே கவனிக்கவில்லை. நமது சர்க்கார் அதற்கான வழியை உருவாக்கித் தரவேண்டு மென்று கேட்டுக கொள்கிறேன். கலெக்டர் என்ற பெயரை மாற்ற வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலெக்டர் என்பது ஒரு காலத்தில் ரெவின்யூவை கலெக்ட் பண்ணிய காரணத்தால் கொடுக்கப்பட்டது. இன்றையதினம் "மாவட்ட ஆட்சித் தலைவர்" என்று தமிழிலே அழகாகப் போட்டிருக்கிறார்கள். எனவே, "டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கமிஷனர்" என்ற முறையிலே ஏதாவது ஒரு நல்ல பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.